1971 ஜூலை 24]

திரு. செ. சதாசிவம் : பென்னாடம் அருகே உள்ள சுகர் பாக்டரிக்கு திருச்சி மாவட்டத்திலே இருந்து கரும்பு கொண்டு வரும் வகையிலும், தஞ்சாவூர்—தென்னார்க்காடு பாதையை சுலப மாக்கும் வகையிலும், பென்னாடம் அருகே உள்ள வெள்ளாற்றிலே பாலம் கட்ட இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

வேலூர்—ராணிப்பேட்டை சாலையில் விஷாரத்தில் பைபாஸ் ரோட்

* 430 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வேலூர்—ராணிப்பேட்டை சாலையில் விஷாரத்தில் பஸ் போக்குவரத்துக்கு பைபாஸ் ரோட் (Bye-pass road) போடப் படும் திட்டம் எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த வேலை அக்டோபர் 15-ந் தேதி அளவில் முடிக்கப்படலாம்.

திரு. நா. வீராசாமி : வேலூர்—ராணிப்பேட்டை சாலையிலே இரண்டு மைலுக்கு ஒரு ஊர் இருக்கிறது. அந்த 16 மைல் தூரத் திலே 16 வளைவுகள் இருக்கின்றன. இப்படி அரசாங்கம் ஒரு பைபாஸ் ரோட்டை போடுவதற்கு பதிலாக, வேறு ஒரு புதிய ரோட்டையே ஏன் போடக்கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது இந்த பைபாஸ் ரோட்தான் முடியும் தருவாயில் இருக்கிறது. அதை விட்டு புதிய ரோடு போட வேண்டுமென்றால், அதிலே கஷ்டங்கள் ஏற்படும். எப்படியும் உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்பட்டு, காரியங்கள் ஆற்றப்படும்.

மதுரை—தொண்டிச் சாலையிலிருந்து ஆனந்தூர் செல்லும் சாலை

* 431 வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—தொண்டிச் சாலையிலிருந்து பிரிந்து ஆனந்தூர் செல்லும் சாலையில் மெட்டல் பரப்பி பாலங்கள் அமைத்து பரா மரிப்புச் செய்து தரும்படி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.